தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக் கிழமை, 1978 செப்டம்பர் 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்

கரும்பு சாகுபடிக்கு கடன்

8. கே.—திரு. கோ. சி. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், பாபநாசம், சீர்காழி, மாயவரம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துறைப் பூண்டி ஆகிய வட்டங்களில், கரும்பு சாகுபடிக்கென்று 1977 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஜூலை 31 ஆம் தேதி முடிய கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலம் கும்ப கோணம் மத்திய கூட்டுறவு வங்கி, எத்தனை ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களுக்காக கடன் வழங்கியுள்ளது?

(இ) வழங்கப்பட்ட தொகை (1) மொத்தம், (2) வட்ட வாரியாக எவ்வளவு?

பதில்.—(அ) & (இ) அவையில் ஓர் அறிக்கை @ வைக்கப் பட்டுள்ளது.

அரிசனங்கள் நடத்தும் உப்பு உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள்.

9. கே.—திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் முழுக்க முழுக்க அரிசனங்களே அமைத்து நடத்து கின்ற உப்பு உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கு உள்ளன?

9. 890. ப—

சங்கங்களின் பெயர்.	சங்கம் இருக்கும் மாவட்டம்
1. மொரக்காணம் உப்பு தொழிலாளர் கூட்டுறவு & விற்பனை சங்கம். ..	தென் ஆற்காடு

@499ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2. செய்யூர் அரிசன கூட்டுறவு உப்பு உற்பத்தி விற்பனை சங்கம். .. செங்கற்பட்டு

3. தய்யூர் அரிசன கூட்டுறவு உப்பு உற்பத்தி விற்பனை சங்கம். .. செங்கற்பட்டு

4. உற்பத்தி & விற்பனை சங்கம்... செங்கற்பட்டு

5. துலுக்கன்குளம் அரிசன உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம். .. திருநெல்வேலி

6. விேனாபாஜி அரிசன உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் ... திருநெல்வேலி

Provident Fund Accounts of Aided School Teachers.

10. Q.— THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a). whether it is a fact that a sum of Rs. 10/- per month deducted from the salary of Aided School teachers at Mannargudi, Thanjavur District, from 1-2-1974 to 1-2-1975, has not been credited to the Provident Fund accounts of such teachers;

(b) if so, the reason for the omission; and

(c) the action proposed to be taken in the matter?

ப.—(அ) ஆம்.

(இ) தனியார் பள்ளி நிர்வாகத்தினர்களிடமிருந்தும், பள்ளித் துணை ஆய்வாளரிடமிருந்தும் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கூடுதல் கொடுப்பு நிதி (Excess subscription) பற்றிய விவரங்கள் கிடைக்காத தால் வருங்கால சேமநலநிதிக் கணக்குகளில் சேர்க்கப்படவில்லை.

(உ) நாகப்பட்டின மாவட்டக் கல்வி அலுவலர், ஆசிரியர் களிடமிருந்து குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கூடுதலாக பிடிக்கப் பட்ட தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வங்கி டிராப்ட்டுகளை (Bank Drafts) 16-5-1978 அன்று, தனியார் பள்ளி நிர்வாகத்தினர் களுக்கு ஆசிரியர்களின் வருங்கால சேம நிதியில் சேர்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

Mahatma Gandhi Memorial Tubarculosis Sanatorium, Segipatti

11Q.— Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware of the serious allegations made regarding the maladministration in Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti; and

(b) if so, whether there is any proposal to appoint an Enquiry Committee to go into the matter?

A.— (*a*) Certain complaints have been received against the administration of Mahatma Gandhi Memorial T. B. Sanatorium which is under private management.

(*b*) They were examined by Government and they were found to be baseless.

(அ) செங்கிப்பட்டியில் தனியார் பராமரிப்பிலுள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் நிலையத்தின் நிர்வாகத்தில் தவறுகள் பற்றி சில புகார்கள் அரசிற்கு வந்துள்ளது.

(இ) அவைகளை அரசு ஆய்வு செய்தது. ஆதாரமற்றவை எனக் கருதுகிறது.

2. அரசின் தீர்மானம்.

வினு நேரம் கைவிடப்படுதல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைக்கு ஒரு தகவல். இன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில், எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையும், முதல்வருடைய பதிலுரையும் இருப்பதால் வினு நேரத்தை ரத்து செய்து மற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அவையின் அபிப் பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தலைவர் அவர்களே, ''சட்ட மன்ற மேலவையின் விதி 22-ன் கீழ் கேள்வி நேரம் கைவிடப்படலாம்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளை எல்லாக் கட்சித் தலைவர் களும் ஏற்றுக்கொண்டால் நாங்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்,